சிறை நீதிமன்றம், விருதுநகர்
முன்னிலை திருமதி.வி.கீதா, பி.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2, சாத்தூர்
2018ம் ஆண்டு ஜூன் மாதம் 22ம் நாள் வெள்ளிக்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1 – 2018

---------

அரசுக்காக காவல்துறை சார்பு ஆய்வாளர்,
சாத்தூர் நகர் காவல்நிலையம்
குற்ற எண். 430 - 2017 .. குற்றமுறையிடுபவர்

- எதிர் -

வாள்வாங்கி குமார் (எ) முத்துக்குமார், 32-17
த.பெ.பாண்டி
சுப்புராஜ் நகர்,
அரசு மருத்துவமனை பின்புறம்
அருப்புக்கோட்டை
(மேற்படி எதிரி மீதான வழக்கு சி.சி.180- 2017ல்
இருந்து தனியாக பிரிக்கப்பட்டுள்ளது) .. எதிரி

இவ்வழக்கானது ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 180-2017ல் இருந்து 12.01.2018ம் தேதி பிரித்தெடுக்கப்பட்டு அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2, சாத்தூர் அவர்கள் ஆஜராகியும் எதிரியின் தரப்பில் வழக்கறிஞர் யாரும் ஆஜராகாமலும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கின் புகார்தாரர் சுப்புலட்சுமி 1.8.2017ம் தேதி தனது ஊரிலிருந்து கேரளா மாநிலம் கண்ணூருக்கு செல்வதற்காக சாத்தூர் பஸ் ஸ்டாண்டில் வந்து இறங்கி தனது மூத்தமகன் மருதுபாண்டியுடன் மாலை சுமார் 15-30 மணியளவில் சாத்தூர் ரயில்வே ஸ்டேசனுக்கு நடந்து சென்று கொண்டிருந்த போது சாத்தூர், கே.சி.ஏ.டி. பள்ளி அருகில் சுமார் 10 அடி தூரத்தில் மேற்கில் இருந்து கிழக்காக நடந்து சென்று கெண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 67 BY 3368 Yamaha FZS என்ற இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி கமுசுவலிங்கம் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து புகார்தாரரின் அருகில் வந்த உடன் மேற்படி இருசக்கர வாகனத்தின் வேகத்தை குறைத்த போது மேற்படி இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்திருந்த எதிரி வாள்வாங்கி குமார் (எ) முத்துக்குமார், புகார்தாரரின் கழுத்தில் அணிந்திருந்த சுமார் மூன்றேகால் பவுண் எடை கொண்ட கேரளா மாடல் தங்கத் தாலிச் செயினை பறித்துச் சென்றதாகவும் எனவே எதிரிகள் இருவரும் பிரிவு 392 இதச.கீழ் தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாக சாத்தூர் நகர் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) இவ்வழக்கில் தாக்கலான ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு

குவிமுச 207வது பிரிவின்படி இலவசமாக வழங்கப்பட்டு போதிய கால அவகாசத்திற்கு பின்னர் எதிரியயிடம் குற்றம் பற்றி வினவியபோதும், எதிரி மீது இதச.பிரிவு 392ன் கீழ் குற்றச்சாட்டு வனைய முதல்நிலை வழக்கும் போதுமான ஆதாரங்களும் இருந்ததால் எதிரி மீது மேற்படி பிரிவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வினவியபோதும் எதிரி குற்றத்தை மறுத்து குற்றவாளி இல்லை என்றார்.

3) எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க வேண்டி அரசு தரப்பில் சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அசா.1 முதல் அசா.5 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அசாஆ.1, அசாஆ.2 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. சான்றுப் பொருள் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

3) வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் புகார்தாரர் சுப்புலட்சுமி 1.8.2017ம் தேதி தனது ஊரிலிருந்து கேரளா மாநிலம் கண்ணூருக்கு செல்வதற்காக சாத்தூர் பஸ் ஸ்டாண்டில் வந்து இறங்கி தனது மூத்தமகன் மருதுபாண்டியுடன் மாலை சுமார் 15-30 மணியளவில் சாத்தூர் ரயில்வே ஸ்டேசனுக்கு நடந்து சென்று கொண்டிருந்த போது சாத்தூர், கே.சி.ஏ.டி. பள்ளி அருகில் சுமார் 10 அடி தூரத்தில் மேற்கில் இருந்து கிழக்காக நடந்து சென்று கெண்டிருந்த போது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி TN 67 BY 3368 Yamaha FZS என்ற இருசக்கர வாகனத்தில் வந்த எதிரி கழுசுவலிங்கம் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து புகார்தாரரின் அருகில் வந்த உடன் மேற்படி இருசக்கர வாகனத்தின் வேகத்தை குறைத்த போது மேற்படி இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்திருந்த எதிரி வாள்வாங்கி குமார் (எ) முத்துக்குமார், புகார்தாரரின் கழுத்தில் அணிந்திருந்த சுமார் மூன்றேகால் பவுண் எடை கொண்ட கேரளா மாடல் தங்கத் தாலிச் செயினை பறித்துச் சென்றதாகவும் புகார்தாரர் கொடுத்த புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. புகாரிலேயே சம்பவ இடம், மற்றும் சம்பவ நேரம் குறித்து தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சிறை நீதிமன்ற விசாரணையின்போது எதிரி தம் மீதுள்ள குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். எதிரியின் குற்ற ஒப்புதலை ஏற்றும் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததிலும் எதிரியின் மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கபட்டுள்ளது என முடிவு செய்து எதிரியை இதச.பிரிவு 392 பிரிவின் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கப்படுகிறது. பின்னர் எதிரியிடம் விதிக்கப் போகும் தண்டனை குறித்து 248(2) கு.வி.மு.ச.வின் கீழ் வினவியபோது

தெரியாமல் செய்துவிட்டேன். இனி தவறு எதுவும் செய்ய மாட்டேன். சிறையில் இருந்த காலத்தை தண்டனையாக கருதி வெளியில் விடவும்

என்றார். எதிரியின் வேண்டுகோளை ஏற்றும் வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டும் எதிரிக்கு குறைந்தபட்ச அபராதம் மற்றும் தண்டனை மட்டும் விதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

4) முடிவாக எதிரியை இதச.பிரிவு 392ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து

எதிரிக்கு இதச.பிரிவு 392ன் கீழான குற்றத்திற்கு அபராதம் ரூ.50-விதித்தும் கட்டத் தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைதண்டனை விதித்தும் 10 மாதங்கள் கடுங்காவல் சிறைதண்டனை குவிமுச.பிரிவு 248(2)ன் கீழ் விதித்தும் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. மேலும் எதிரி சிறையில் இருந்த காலமான 30.08.2017 முதல் 22.06.2018 வரையான காலத்தையும் தண்டனை காலத்திலிருந்து கழித்துக் கொள்ள குவிமுச.பிரிவு 428ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

5) இவ்வழக்கில் பி.ஆர்.எண். 515- 2017ல் கைப்பற்றப்பட்ட தங்கச் செயினை அதன் உரிமையாளர் இடைக்கால பொறுப்பில் பெற்றுச் சென்றுள்ளதை வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அவரே வைத்துக் கொள்ளவும் பிணைப் பத்திரத்தை ரத்து செய்யவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2018ம் ஆண்டு ஜுன் மாதம் 22ம்நாள் சிறை நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்) வி.கீதா
நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்.

<u>பின் இணைப்பு -</u>
<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>
அசா.1 – திரு.மருதுபாண்டி
அசா.2 – திரு.சண்முகராஜ்
அசா.3 – திருமதி.சுப்புலட்சுமி
அசா.4 – திரு.திருமலைராஜா
அசா.5 – திரு.மாரீஸ்வரன்

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u>
அசாஆ.1 – புகார் மனு
அசாஆ.2 – புகைப்படம்

<u>அரசு தரப்பு சான்றுப் பொருள்</u> -
சா.பொ.1 – சுமார் 3.1/4 பவுண் எடை கொண்ட தங்க செயின் ஒன்று

<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்</u> - இல்லை

(ஒம்) வி.கீதா
நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்.

1) வழக்கின் முடிவு காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2) வழக்கு விசாரனையின் போது எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்தார்
3) எதிரி சிறையில் இருந்த காலமான 30.08.2017 முதல் 22.06.2018 வரையான காலத்தை தண்டனை காலத்திலிருந்து கழித்துக் கொள்ள குவிமுச.பிரிவு 428ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

உண்மை நகல்

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்.